

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் நேற்று முன்தினம் (23.06.2025) சென்னை, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக கூட்ட அரங்கில் 2024–25ஆம் கல்வியாண்டில் இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திய முதல் மாவட்டம் சேலம் இரண்டாவது மாவட்டங்கள் தேனி, திருநெல்வேலி மூன்றாவது மாவட்டம் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களுக்கு கேடயங்களை வழங்கினார். இந்நிகழ்வில் பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் மரு ப.சந்தர மோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண் இயக்குநர் முனைவர் பொ.சங்கர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநில திட்ட இயக்குநர் மரு மா.ஆர்த்தி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருச்சியில் நடைபெற்ற சௌதி அரேபியா அயலகத் தமிழர் அணியின் நிர்வாகி பி.ஆர்.எம். ஆரிப்மக்பூல் மகள் எம்.ஏ. அஷ்ரப் நிசா மணமகன் எம்.இம்தியாஸ் அகமது ஆகியோரது திருமண விழாவில் தலைமை நிலையச் செயலாளரும் வீட்டு வசதி வாரியத் தலைவருமான எஸ்.பூச்சி முருகன், தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையத்தின் துணைத் தலைவர், கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவைச் செயலாளர் இறையன்பன் குத்தூஸ், அயலகத் தமிழர் நலத் துறை உறுப்பினர் புகழேந்தி, சௌதி அரேபியா அயலக அணியின் நிர்வாகி வெங்கடேஷ் ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

### மன்னார்குடி தொகுதியில் இலவச பட்டாவினை

# வீடுதேடிபோய் வழங்கிய அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா!

திருவாரூர், ஜூன் 25-

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நெடுவாக்கோட்டை மற்றும் திருமக்கோட்டை திருமேனி பகுதியிலுள்ள நரிக்குறவ மக்கள் மற்றும் நீடா மங்கலம் வட்டத்திற்குட்பட்ட கோவில்வெண்ணி மற்றும் மணலூர் கிராமத்தினைச் சேர்ந்த பயனாளிகளின் வீடுகளுக்கே நேரடியாக சென்று தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா அவர்கள், தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழ்காட்டுதல்களின்படி 138 குடும்பங்களுக்கு இலவச பட்டாக்களை வழங்கினார்.

தொடர்ந்து, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் பயனாளிக்கு சலவை இயந்திரமும், தையல் இயந்திரத்தினையும், மணலூர் கிராமத்தில் முதலமைச்சரின் வீடுகள் மறுகட்டுமான திட்டத்தின் கீழ் தலா ரூ.2.40 லட்சம் மதிப்பீட்டில் 21 நபர்களுக்கு வீடுகள் மறுகட்டுமான பணிகளுக்கான ஆணையினையும் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் மோகனச்சந்திரன், அப்போது தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா தெரிவித்ததாவது,

“முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் செயல்படும் திராவிட நாயகர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் ஏறத்தாழ 45 ஆண்டுகளுக்கு பிறகு இப்பகுதி மக்களின் கனவினை நிறைவேற்றும் விதமாக பட்டா வழங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வு வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்வாகும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசில் தமிழ்நாடு முழுதுவதும் ஏறத்தாழ பல லட்சம் குடும்பத்திற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது.

திருவாரூர் மாவட்டத்தில் மட்டுமே ஏறத்தாழ 1000க்கும்மேற்பட்ட குடும்பத்திற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க நேரடியாக மக்களின் வீடுகளுக்கு சென்று பட்டா வழங்கப்பட்டுவருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மன்னார்குடி மட்டுமின்றி, தமிழ்நாட்டின் எந்த மாவட்டத்திலும் பட்டாவின்றி எவரும் இருக்கக்கூடாது என்பதனை கருத்தில் கொண்டு அதனடிப்படையில் இன்றைய தினம் திருமக்கோட்டை திருமேனி பகுதியினை சேர்ந்த பயனாளிகளுக்கும், நெடுவாக்கோட்டை பகுதியினை சேர்ந்த பயனாளிகளுக்கும் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசானது பெண்கள் மீது நம்பிக்கையும், மதிப்பும், அக்கறையும் கொண்டு மாதந்தோறும் கலைஞரின் மகளிர் உரிமைத்தொகை வழங்கிவருகிறார்கள். கலைஞரின் மகளிர் உரிமைத்தொகை கிடைக்கப்பெறாத மகளிர்களுக்கும் மீண்டும் விண்ணப்பம் பெறப்பட்டு விரைவில் அவர்களுக்கும் உரிமைத்தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது. தற்பொழுது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கிய பட்டாவினை உங்கள் வீடுகளுக்கு நேரில் சென்று வழங்கவுள்ளோம். உங்களுடைய நீண்ட நாள் கனவினை நிறைவேற்றிய தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களின் ஆட்சியினை நீச்சயம் என்றென்றும் பாராட்டுவீர்கள் என தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி.ராஜா தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, மன்னார்குடி வட்டம், கட்டக்குடி பாலம் முதல் கீழநெம்மேலி வரை 42.40 கி.மீ இருந்து 53.40 கி.மீ வரை ஆகாய தாமரைகள் பாலத்தின் மேற்புறம் தேங்கியுள்ளதனை ஜேசிபி இயந்திரம் மற்றும் ஆட்கள் மூலம் எடுக்கப்பட்டுவருவதனை தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி.ராஜா அவர்கள் பார்வையிட்டார். முன்னதாக, திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், கோவில்வெண்ணி ஊராட்சியில், மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினர் (2023-2024) மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட புதிய பேருந்து நிலையத்தையும் , கோவில் வெண்ணி ஊராட்சி, மணலூர் கிராமத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.16 லட்சத்து 55 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய அங்கன்வாடி மைய கட்டடத்தினையும் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி.ராஜா அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வுகளில் ஒன்றிய செயலாளர்கள் டி.எஸ்.டி. முத்துவேல், சித்தேரி சிவா, நா.கவியரசு, பொதுக்குழு உறுப்பினர் கலைவாணி மோகன், காஞ்சித்துறை, அவைத்தலைவர் க. தனராஜ், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் வி.கே.எம்.முருகா னந்தம், தகவல் தொழில்நுட்ப அணி பைங்காநாடு இளைய ராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் அரசு அதிகாரிகள், பொதுமக்கள் உடன் இருந்தனர்.

### நாமக்கல் மத்திய

# கூட்டுறவு வங்கி மூலம் 55,583 விவசாயிகள் பயன்பெறுவர்!

### கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. தகவல்!



நாமக்கல், ஜூன் 25 -

நாமக்கல் மத்திய கூட்டுறவு வங்கி மூலம் 55,583 விவசாயிகள் பயன்பெறுவர் என நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மோகனூர் சாலையில் உள்ள நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தலைமை அலுவலகத்தில், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குனராக சந்தானம் பொறுப்பேற்றார். அவரின் பணிசேர் அறிக்கையினை மண்டல இணைப்பதிவாளர் க.பா.அருளரசு, நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் முன்னிலையில் வழங்கினார்.

இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் பேசுகையில்,

நாமக்கல் மாவட்டத்திற்கு தனியாக மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, சேலம் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு, 33 ஆண்டு பிறகு , 2024 மார்ச் அரசாணை, வெளியிடப்பட்டு தற்போது செயல்படுகிறது.

நாமக்கல் மாவட்ட விவசாயிகள் , பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று, சேலம் மாவட்டத்திலிருந்து தனியாக பிரிக்கப்பட்டு நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி வழங்கியதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆகியோருக்கு நாமக்கல் மாவட்ட மக்களின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். பாரத ரிசர்வ் வங்கிக்கு, நபார்டு மூலம் அனுமதி கோரப்பட்டு, தற்போது, முதல் கட்ட அனுமதி கிடைத்துள்ளது.

நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு, 30 கிளைகள், 4 வட்டார அலுவலகங்கள் உள்ளன. இதில் இட்டு வைப்பு ரூ. 1,844 கோடி உள்ளது. கடன் உதவிகள் ரூ. 1,650 கோடி வழங்கப்பட்டுள்ளன.

மொத்தம் ரூ. 3,500 கோடிக்கு மேல் சொத்துக்கள், பொறுப்புகள், சேலம் மாவட்டத்திலிருந்து பிரிவினை செய்யப்பட்டு உள்ளது. இந்த வங்கி முழுமையாக இயங்க, அதிகாரிகள், இணைப் பதிவாளர், மேலாண்மை இயக்குநர், பணியாளர்கள், ஆகியோரை அரசு அமர்த்தியுள்ளது.

பொது மேலாளர் தீனதயாளன், உதவி பொது மேலாளர்கள் ஏற்கனவே பணியில் சேர்ந்துள்ளனர்.

இந்த வங்கி விரைவில் திறக்க தேதி அறிவிக்கப்படும், நிரந்தர அனுமதிக்கு பின்னர் விண்ணப்பிக்கப்படும்.

முழுமையாக மேலாண் இயக்குநர் ஜூன் 23 முதல் பணியில் இருப்பார்.

இனி வங்கி பணிகள், முழு வேகத்தில் பணிகள் நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து முறையான, வங்கிப் பணியை தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் தொடங்கி வைப்பார்.

இந்த வங்கியில், 169 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி உள்பட மொத்தம் 746 இணைப்பு சங்கங்கள் அடங்கும்.

இந்த வங்கி மூலம், 55,583 விவசாயிகளுக்கு பயிர் கடன் ரூ. 625 கோடி வழங்கப்பட்டது. கால்நடை வளர்ப்பு,மத்திய கால கடன்,நகைக் கடன்,

மாற்றுத் திறனாளிகள் கடன், மகளிர் சுய உதவிக் குழு கடன், மாணவர் கல்வி கடன், கலைஞர் கனவு இல்லம் கடன் உள்ளிட்ட பல்வேறு கடன் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

நாட்டில், 351 மாவட்ட கூட்டுறவு வங்கிகள் உள்ளன. நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி வழங்கியதற்கு, தமிழக முதலமைச்சர் மு க ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தியாவில் 352 மாவட்ட கூட்டுறவு வங்கியாக நாமக்கல் வங்கி திறக்கப்படுகிறது. இதற்கு, பாரத ரிசர்வ் வங்கி கொள்கை ரீதியான அனுமதி வழங்கி உள்ளது. நிரந்தர அனுமதி விரைவில் கிடைக்கப்படும், கிடைக்கும் என்று மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் ஒன்றிய கழக செயலாளரும், நிர்வாக குழு உறுப்பினருமான பெ.நவலடி, மாமன்ற உறுப்பினரும், நிர்வாக குழு உறுப்பினருமான குட்டி (எ) செல்வகுமார் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் உடன் இருந்தனர்.

### ‘நீட்’ தேர்வு: முதல் கோணல் முற்றிலும் கோணல்!

# ஒவ்வொரு நிலையிலும் நிறைந்திருப்பது குளறுபடிகளும் முறைகேடுகளும்தான்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, ஜூன் 25 -**

**NEET UG 2025 தேர்வில் முறைகேடு செய்து, ரூ.90 லட்சம் பணம் பெற்றுக்கொண்டு, குறைந்த மதிப்பெண் பெற்ற மாணவர்கள் அரசு மருத்துவக் கல்லூரிகளில் சேர்க்கை பெற உதவியதாக மகாராஷ்டிராவைச் சேர்ந்த மருத்துவர் ஒருவர் மீது CBI வழக்கு பதிவு செய்துள்ளது தொடர்பாக கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு :**

தரம், தரம் என்றார்கள்!

NEET தேர்வின் ஆதி முதல் அந்தம் வரை பணம், பணம்தான் விளையாடுகிறது.

நீட் எனும் தேர்வுமுறையே ஒரு moral ஊழல்! அது போதாதென்று, வினாத்தாள் தொடங்கி, தேர்வறை, முடிவுகள் வெளியீடு வரை ஒவ்வொரு நிலையிலும் நிறைந்திருப்பது குளறுபடிகளும் முறைகேடுகளும்தான்.

நீட் முதல் கோணல் முற்றிலும் கோணல்!

RSS BJP மாநாடுகளில் showpieceஆக உட்கார நேரமிருக்கும் அ.தி.மு.க.வினருக்கு இவற்றை எதிர்த்து, தங்கள் எஜமானர்களிடம் பேச நேரமோ, மானமோ இல்லை!”

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# திரு.வி.க. நகரில் அறுசுவை உணவு வழங்கல்!

சென்னை, ஜூன் 25-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 124 ஆம் நாளான கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு திரு.வி.க நகர் தெற்கு பகுதி: 1) வட்டம் 75 கே.எச் ரோடு, 2) வட்டம் 75 (அ) எஸ்.எஸ்.புரம், சென்னை. ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு “தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, எம்.சாமிகண்ணு, இசட்.ஆசாத், பி.ஜெ.துளசிங்கம், இரா. வீரமணி, நா.துலுக்காணம், எம்.பெரோஸ்கான், கா. ராஜ்முகமது. மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்

# இலத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் கே.எஸ்.இராமச்சந்திரன் மறைவு!

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் - எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. - ஆர்.எஸ்.பாரதி - க.சுந்தர் எம்.எல்.ஏ. அஞ்சலி!

காஞ்சிபுரம், ஜூன் 25-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், இலத்தூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளரும் லத்தூர் முன்னாள் ஒன்றியப் பெருந்தலைவருமான கே.எஸ்.இராமச்சந்திரன் அவர்கள் சில மாதங்களாக உடல்நிலை சரியில்லாததால் தனியார் மருத்துவனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் (22.6.2025) அன்று இரவு 7.30 மணிக்கு இயற்கை யெய்தினார் என்பதினை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் அமைச்சர் தா.மோ.அன்பரசன், எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. ஆகியோர் மறைந்த கே.எஸ்.இராமச்சந்திரன் உடல் மீது மலர் வளையம் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினர்.

மேலும் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட அவைத் தலைவர் இனியரசு, மாவட்ட துணைச் செயலாளர்கள் க.செல்வம் எம்.பி., கு.மலர்விழி, மாவட்ட பெருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம், செய்யூர் சட்டமன்ற உறுப்பினர் பணையூர் பாபு, காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் வி.தமிழ்மணி, இதயவர்மன்,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டப் பொருளாளர் த.விஸ்வநாதன், மாநில இளைஞர் அணிய துணைச் செயலாளர் ப.அப்துல் மாலிக், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.ஆர்.நாராயணன், ஆர்.டி.அரசு, எம்.எஸ்.சுகுமார், காஞ்சிபுரம் மாநகர செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன், பொதுக்குழு உறுப்பினர்கள் வெளிக்காடு ஏழுமலை, எஸ்.சிகாமணி, எஸ்.உசேன், பொன். சசிகுமார், எஸ்.கே. இராஜேந்திரன்,

காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் படப்பை மனோகரன், ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பின் தலைவர் தியாகராஜன், மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் வி.என்.ராமகிருஷ்ணன், ஒன்றியக் குழு பெருந்தலைவர்கள் திருமதி மலர்க்கொடி குமார், ஆர்.கே.தேவேந்திரன்,

மதுராந்தகம் நகரச் செயலாளர் கே.குமார், ஒன்றியச் செயலாளர்கள் டி.வி.கோகுலகண்ணன், கெ.ஞானசேகரன், பி.எம்.குமார், பி.சேகர், டி.குமார், க.குமணன், பி.எம். பாபு, சத்திய சாய், பொன்.சிவகுமார், கே. கண்ணன், ஜி.தம்பு, சரவணன், சிற்றரசு, எம்.எஸ். பாபு. ஏழுமலை, பகுதி செயலாளர்கள் எஸ்.சந்துரு, கே.திலகர், அ.தசரதன், சு.வெங்கடேசன், பேரூர் செயலாளர்கள் என்.எஸ்.பாரிவள்ளல், என்.பாண்டியன், ஆ.சுந்தரமூர்த்தி, மோகன்தாஸ், வி.எழிலரசன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் அ.யுவராஜ், மலர் மன்னன், ரங்கநாதன், ஏ.நூருல் அமீன், பரத், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பெ.மணி, க.பால்ராஜ், டி.சஞ்சய் காந்தி, அருள் முருகன், ஆண்ட்ரோ திரில்ராஜ், எஸ்.யுவராஜ் உள்பட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர,பேரூர், வார்டு, கிளைக்கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சிமன்றபிரதிநிதிகள் கழக முன்னணியத்தோழர்கள் திரளாகச் சென்று மறைந்த கே.எஸ்.இராமச்சந்திரன் உடல் மீது மலர் வளையம் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர். ’

மறைந்த கே.எஸ்.இராமச்சந்திரன் அவர்களுக்கு ஒன்றியப் பெருந்தலைர் சாந்தி இராமச்சந்திரன் என்று மனைவியும், கார்த்திக், கீர்த்தி என்ற இரு மகன்களும் உள்ளனர். இதில் கார்த்திக் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராக உள்ளார்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் லத்தூர் ஒன்றியம் சோழக்காட்டில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து (23.6.2025) அன்று மாலை 4 மணிக்கு புறப்பட்டு அங்குள்ள இடுக்காட்டில் தகனம் செய்யப்பட்டது.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், இலத்தூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் மறைந்த கே.எஸ்.இராமச்சந்திரன் அவர்களின் உடலுக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., முன்னாள் ஒன்றிய இணை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., பனையூர் பாபு எம்.எல்.ஏ., வெளிக்காடு ஏழுமலை, ஒன்றியக் குழுத் தலைவர் டாக்டர் ஆர்.டி.அரசு உள்ளிட்ட கழகத்தினர் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.